# பண்டாரகம பிரதேச சபை
# களுத்துறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 சனவரி 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பண்டாரகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அன்பளிப்பாகப் பெறப்பட்டிருந்த ரூபா 151,492 பெறுமதியான புத்தகங்களினதும் ரூபா 153,224 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட 05 சொத்து விடயங்களினதும் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 175,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரொட்டரி சேவிங் இயந்திரம் மூலதனமாக்கப்படுகையில் ரூபா 17,500 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சியக் கணக்கு மீதி ரூபா 1,284,547 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த வீத வரி ரூபா 53,472 தொகை மீளாய்வாண்டின் வீதவரி வருமானத்திற்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் தொழிற்சாலை உதவியாகப் பெறவேண்டிய ரூபா 44,316,613 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் நிலுவையான முத்திரை வருமானமாக ரூபா 41,416,205 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய மீதி ரூபா 15,349,794 தொகையானமையால் முன்னைய ஆண்டிற்காக கூடுதலாகப் பெறப்பட்ட ரூபா 26,066,411 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிராமையால் நடைமுறை ஆண்டின் பெறவேண்டிய மீதி அப் பெறுமதியில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளச்செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக் கணக்கு மீதியான ரூபா 528,436 தொகை பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 68,441,245 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,755,603 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,594,382 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 6,861 | 8,435 | 2,091 |
| (ii) | வாடகை | 7,766 | 2,858 | 1,062 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,046 | 861 | 69 |
| (iv) | ஏனைய வருமானம் | 111,047 | 88,884 | 15,057 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 10,432,491 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,933,589 |

**2.2.3 வியாபார வரி**

அதிகாரிபத்துவ உப அலுவலகத்தின் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 15,240 தொகையான 14 வியாபார நிலையங்களின் வியாபார வரி உரிய வியாபாரம் மூடப்பட்டுள்ளதாகவும் ரூபா 4,250 தொகையான 05 வேலைகளுக்கும் உரிய வேலை வரி உரிய வியாபாரம் அவ் இடங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளதாக 2012 சனவரி 18 ஆம் திகதி வருமானப் பரிசோதகர் வழங்கிய பரிந்துரையில் பதிவளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2011 ஆம் ஆண்டில் இவ் வியாபாரம் நடாத்தப்பட்டிராமைக்கு எவ்வித சான்றுகளும் இருக்கவில்லை.

**2.2.4 கடைகளிலிருந்து நீருக்கான கட்டணத்தை அறவிடாமை**

பண்டாரகம வியாபாரத் தொகுதியில் 18 கடைகளும், புதிய வியாபாரத் தொகுதியில் 15 கடைகளுமாக கடைகள் வாடகைக்கிடப்பட்டிருந்ததுடன் அவ் உடன்படிக்கையின் படி கடைகளுக்குரிய நீர்ப் பட்டியல் வாடகைக்கிருப்போரால் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் கீழ் உள்ள பால் நிலையத்திற்கான நீர்த்தாங்கியிலிருந்து கடைகளுக்காக நீர் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் பால் நிலையத்தின் மின்சாரப் பட்டியலிற்காக 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 73,525 தொகையும் 2012 இற்காக ரூபா 97,577

தொகையும் 2013 சனவரி, பெப்ரவரி மாதங்களுக்காக ரூபா 16,153 தொகையும் சபை செலவிட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 645,435 தொகையான "அறவிடப்படுவதற்குள்ள வேலை" மீதியும் 2009 ஒக்டோபர் முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 10,470 தொகையான "மறுக்கப்பட்ட காசோலைகள்" மீதியும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 111,752,661 தொகையான செலவினக் கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 18,400,100 தொகையான மீதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

கருங்கல் உடைக்கும் செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சீனத் தயாரிப்பான PE 250 மி.மி அளவில் "ஷெம்பாவோ" வகையைச் சேர்ந்த 20 குதிரைச் சக்தி மின்சார வழங்கலினூடாக செயற்படுகின்ற இயந்திரத்துடன் உதிரிப்பாகங்களையும் உள்ளடக்கிய இயந்திரமொன்று வழங்கப்பட்டு பொருத்துவதற்காக ரூபா 1,834,875 தொகை 2007 செப்தெம்பர் 17 ஆந் திகதியும் நிறுத்தி வைத்தல் பணத்தில் 50% ஆன ரூபா 101,937 தொகை 2008 மார்ச் 28 ஆந் திகதியும் செலுத்தப்பட்டிருந்தன. 2008 யூலை 01 ஆந் திகதி மின்சாரம் வழங்கப்பட்டு இயந்திரம் செயற்படுத்தப்பட்ட போது அது உரிய முறையில் செயற்படாமையால் சபையால் ரூபா 32,500 தொகை செலவிடப்பட்டு இயந்திரம் மீளவும் தயாரித்து இயந்திரத்தின் மூலம் கருங்கல் உடைத்தல் செயற்பாடுகள் 2008 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்காக கூறுவிலைகள் கோரப்படாமல் 2008 நவம்பர் 14 தொடக்கம் 2009 நவம்பர் 16 வரை 6x9 அங்குல அளவில் 644.94 கியூப் கருங்கற்கள் ரூபா 1,133,690 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு கிட்டிய காலம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டு 2009 நவம்பர்

தொடக்கம் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இயந்திரம் செயற்பாடற்று துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

**2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 4,037,971 ஆகக் காணப்பட்டது.

(ஆ) வழங்கப்பட்டு எனினும் செலுத்தப்படுவதற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 131,477 தொகையான 23 காசோலைகள் தொடர்பாக கணக்காய்வுத் தினமாகிய 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரையிலும் இலங்கை சனநாயகத்தின் நிதிப் பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீடுகளுக்கு நீர்க்குழாய்கள் பொருத்தப்படுவதற்காக வீதி சேதமாக்கப்பட்டமையால் 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 471,886 தொகை சபையால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு சேதமாக்கப்பட்ட வீதியைத் திருத்துவதற்கோ அல்லது வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கோ கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 06 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நானாவித வேலைத் தளங்களில் 22 நிலையான வீதி ஊழியர்களும், 26 நாட்கூலி வீதி ஊழியர்களும், 7 நிரந்தர சுகாதார ஊழியர்களும், 16 நாட்கூலி ஊழியர்களும் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் சேவையில் ஈடுபட்டமை தொடர்பாக கடமை ஒப்படைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அன்றாடம் கடமை ஒப்படைப்பு தொடர்பான எழுத்து மூலக் குறிப்பும் பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிர்மாணிப்புத் திட்டம் விண்ணப்பங்களில் 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான 985 கூட்டுத்தொகையான விடுதி மற்றும் வர்த்தக விண்ணப்பங்கள் சபையால்

அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு குடியிருக்கப்படுவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய இணக்கச் சான்றிதழ் அந் 4 ஆண்டுகளுக்காகவும் 145 மாத்திரமே பெறப்பட்டிருந்தன.

(ஊ) நிறுவகத்தின் நோக்கும் செயற்பணியும் மேற்கொள்ளப்படுவதற்காக 3 ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வருடாந்த கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1 வருமான விடயத்திற்காகவும் 4 செலவின விடயங்களுக்காகவும் 35% முதல் 72% வரையான வீச்சில் சாதகமான முரண்கள் கண்டறியப்பட்டிருந்ததுடன் 2 வருமான விடயங்களுக்காகவும் ஒரு செலவின விடயத்திற்காகவும் 37% முதல் 71% வரையான வீச்சில் பாதகமான முரண்கள் கண்டறியப்பட்டன. இதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு